# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000
கார்த்திகை 12
முஹறம் 7
புதன் (28-11-1979)
நிறுவியது 1947
புத்தகம் 33
இதழ் 51
விலை சதம் 50


# "எமது சுதந்திர உணர்ச்சியை ராணுவத்தால் அடக்கமுடியாது!

## தமிழீழமும் சிறீலங்காவும் பிரிந்து இரு நேச நாடுகளாக வாழ்வோம்!"

### பாராளுமன்றத்தில் கதிரவேற்பிள்ளை பா.உ. தெளிவுரை!

"சிறீலங்காவைச் சேர்ந்த உங்களுக்கும், தமிழ் ஈழத்தைச் சேர்ந்த எமக்குமிடையே அடிப்படை முரண்பாடுகள் பல இருக்கின்றன. எமது பொருளாதார வாழ்க்கைமுறை உங்களிலிருந்து வேறுபட்டது. எமது பொருளாதாரம் விவசாயத்தையே அடிப்படையாகக்கொண்டது. எமது இரு தேசங்களுக்குமிடையே அரசியலில், பொருளாதாரத்தில் சமுதாய அமைப்பில் அடிப்படை வேறுபாடுகள் உண்டு. நாம் சோசலிசத்தில் நம்பிக்கைகொண்ட ஒரு சமுதாயத்தினர்.

இந்த உண்மையை சிறீலங்காவின் ஜனதிபதியிடம் நான் ஒரு முறை எடுத்து விளக்கினேன்.. வெளியார் தலையீடு ஏதுமின்றி, எம்மைத்தனியே விட்டு விடுங்கள். நாமே எமது அலுவல்களைக் கவனித்துக் கொள்ளுகிறோம், என்று ஜனதிபதியிடம் கூறினேன். அப்போது அவர், உணவுப் பிரச்சினைக்கு என்ன செய்வீர்கள் என்று என்னிடம் கேட்டார்.

"பயப்பட வேண்டாம், எமது நாட்டில் நல்லவிளைச்சல் நடைபெறுகிறது. நெல்லும், நவதானியங்களும் மீனும் எமக்குப் போதிய அளவு அங்கு விளைகின்றன. நாம் பிரிந்து வாழ்ந்தாலும் எமக்கு மேலதிகமானவற்றை உங்களுக்கு அனுப்பித் தருவோம்': என்று அவருக்குப் பதிலளித்தேன்'

இவ்வாறு அரசியல், பொருளாதார, வாழ்க்கை முறைகளால் உங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கும் தமிழ் ஈழத்தைச் சேர்ந்த எம்மை. உங்களுடன் ஒன்று சேரவாருங்கள் என்று நீங்கள் அழைப்பது பொருத்தமானதல்ல. இவ்வாறு பல்வேறு துறைகளில் வேறுபட்டிருக்கும் நாம் எப்படியாக ஒன்றுக வாழ முடியும்? அதுமட்டுமன்றி நாம் உங்களுடன் சேருவதால் உங்கள் வரவு செலவுத்திட்டத்துக்கு என்ன நன்மை கிடைக்கப் போகிறது?

எம்மைக் கண்டிப்போரிடம் நான் ஒரேயொரு கேள்வியை கேட்கிறேன். இலங்கைமுழுவதும் எப்பொழுது ஒரே நாடாக விளங்கியது? ஒருபோதுமே இருக்கவில்லை

எமது தமிழ் ஈழம் சுமார் 400 ஆண்டுகளாக, அபிவிருத்தியின்றி. அந்நியரினால் தொடர்ந்து ஆளப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் போர்த்துக்கீயரும், பின்னர் ஒல்லாந்தரும். அவர்களுக்குப்பின் ஆங்கிலேயரும், இப்போது சிங்களவர்களாகிய நீங்களும்தமிழ்ஈழத்தை ஆள்கிறீர்கள், தமிழ் ஈழத்தின் பாதுகாப்பு இன்று சிங்கள இராணுவத்திடமும், பொலிசிடமும்தான் விடப்பட்டிருக்கிறது.

1833ம் ஆண்டுக்குமுன், தனித்தனி நாடுகளாக இருந்த சிறீலங்காவையும் தமிழ் ஈழத்தையும் ஆங்கிலேயர்கள்தான் தமது நிர்வாக வசதிக்காக— செலவுச் சிக்கனத்திற்காக— இரண்டு ஆளுநர்களுக்கு சம்பளம் கொடுப்பதைத் தவிர்ப்பதற்காக— ஒன்றுக இணைத்தனர்.

பிரிட்டிஷ் ஆட்சி இன்று அகன்று விட்டது எம்மை எமது நாட்டில் விட்டு விடுங்கள் என்றே நாம் கேட்கிறோம்.

நாம் மிகவும் அமைதியான முறையில் அண்மையில் ஒரு கூட்டத்தைநடத்தினேம், அக்கூட்டத்தில் எம்மைக் கண்காணிக்கவென பத்துஜீப்களில் இராணுவத்தினர் வந்திருந்தனர். எமக்காக ஏன் இவ்வளவு பணத்தைக் கரியாக்குகிறீர்கள்!



நாம் அஹிம்சையில்— நம்பிக்கை கொண்டவர்கள். சிங்கள மக்களின் நட்பு மூலமாகவே நாம் எமது சுதந்திரத்தை மீட்போம்.

நாம் சிங்கள மக்கள் மீது மிகவும் மரியாதை வைத்திருக்கிறோம். நாம்சிங்களமக்களுடன் ஒருமோதலைவிரும்பவில்லை. சமாதானமாகவும்

—4-ம் பக்கம் பார்க்க

## துர்நாற்றங்களை நீங்களே வைத்திருங்கள்!

"எமது கட்சியிலிருந்து இரண்டு பேர் பிரிந்து வந்து உங்களுடன் சேர்ந்துகொண்டது உண்மைதான். அவர்கள் கட்சிமாறியபோதும் நாற்றம் அடித்தது. அவர்களை உங்களோடு சேர்த்துக்கொள்வதற்காக அரசமைப்புத் திட்டத்தையே நீங்கள் திருத்தியபோதும் நாற்றமடித்தது. இப்போதும் துர்நாற்றமடிக்கிறது. அவர்களை உங்களுடனேயே வைத்திருங்கள். அதுதான் நல்லது."

—பாராளுமன்றத்தில் சி. கதிரவேற்பிள்ளை

# பாராளுமன்ற உரைகள் தணிக்கை செய்யப்பட்ட சுதந்திரன் பக்கங்கள் சபாபீடத்தில் சமர்ப்பணம்!

## தகுதிவாய்ந்த அதிகாரிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அமிர் வலியுறுத்து!

யாழ் மாவட்டத் தகுதிவாய்ந்த அதிகாரியினுல் தணிக்கை செய்யப்பட்ட பாராளுமன்ற உரைகளைக்கொண்ட சுதந்திரன் இதழின் 'புறுவ்' பிரதிகள் பாராளுமன்ற சபாபீடத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களினுல் சமர்ப்பிக்கப்பட்டன.

இவற்றைச் சமர்ப்பித்துப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர், யாழ்ப்பாண மாவட்டத்தகுதிவாய்ந்த அதிகாரி, இச்சபையின் உரிமையை மீறி நடந்திருப்பதாகவும் அவரை இச்சபைக்கு வரவழைத்து விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்பட்ட பேச்சைத் தணிக்கை செய்யக்கூடிய உரிமை சபைக்கு மாத்திரமே உண்டென்றும்— அதை மீறி அங்குள்ள தணிக்கை அதிகாரி நடந்துகொண்டிருப்பதாகவும் திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறினர்.

திரு. அமிர்தலிங்கம் இந்தப் பிரச்சினையைச் சபையின் உரிமைப் பிரச்சினை

—4-ம் பக்கம் பார்க்க

## 2 லட்சத்து 50 ஆயிரத்தில் 3000 தமிழர்கூட இல்லை!

— சம்பந்தன்

"கடந்த இரண்டு வருடங்களிலும் வழங்கப்பட்ட 2இலட்சத்து 50 ஆயிரம் நியமனங்களில் 5 ஆயிரம் கூடத் தமிழர்களுக்குக் கிடைக்கவில்லை யென்று நல்லூர் பா.உ. கூறினர். ஆனல் அவர் சற்று அதிக எண்ணிக்கையைக் கூறிவிட்டார், உண்மையில் 3 ஆயிரம் தமிழர்களுக்குக்கூட வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. அதிலும் குறிப்பிட்டளவு வேலை வாய்ப்புக்கள் லஞ்சம் கொடுத்தே பெறப்பட்டன. இதுமிகவும் வருத்தத்துக்குரியது— அவமானமானது—வெட்கக் கேடானது— எங்களது இக்குற்றச்சாட்டுக்கு உங்களால் பதில் சொல்லவேமுடியவில்லைஎனது தொகுதியில் அமைக்கப்படும் பிரிமா மாவாலையில் ஒரு தமிழர்கூட வேலைபெறமுடியவில்லை தமிழர்களின் தொழில் திறமையை வெளிநாட்டு மூலதனக்காரர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனல் வேறு இடங்களில் இருந்து அவர்கள்மீது செல்வாக்கு பிரயோகிக்கப்படுகிறது; மாத்தறையையும் களுத்துறையையும் சேர்ந்தவர்களுக்கே அங்கு நியமனம் வழங்கப்படுகிறது" அரசின் இந்த அப்பட்டமான பாரபட்சம் தமிழ் தேசியம் வளர்வதற்கு உந்துசக்தியாக விளங்குகிறது;

—பாராளுமன்றத்தில் இரா. சம்பந்தன்.

# ‘திட்டமிட்ட சோசலிச பொருளாதார அடிப்படையிலேயே எமது அரசு அமையும்! சாதியை ஒழித்திட சமூகப்புரட்சி அவசியம்!’

## இளைஞர் பேரவை ஆய்வரங்கில் அமிர் விளக்கம்

சிறீலங்காவினுடைய வரவு செலவுத்திட்டம் சிறீலங்காப் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுவரும் இத்தருணத்தில் தமிழ் ஈழத்தினுடைய அரசியல், சமுதாய பொருளாதார அமைப்பு எவ்வாறு அமையும் என்பது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. அவர்கள் தமிழ் இளைஞர்பேரவையின் ஆய்வரங்கில் ஆற்றிய உரையின் இரண்டாவதுபகுதியை இங்கு வெளியிடுகிறோம். முதற் பகுதி சென்ற புதன் இதழில் இடம்பெற்றிருந்தது. மூன்றாவது பகுதி அடுத்த புதன் இதழில் வெளியிடப்படும். —ஆர்.

சீனாவை எடுத்துக்கொண்டால் விவசாயம் இன்றைக்கும் தனிப்பட்ட விவசாயிகளினுடைய கையிலிருக்கிறதே தவிர ரஷ்யாவில் செய்வதுபோல், அவற்றை ஒன்று திரட்டிக் கூட்டுப் பண்ணைகள் ஆக்குகின்ற நடவடிக்கையில் மாசேதுங் ஈடுபடவில்லை; சீன மக்களுடைய தன்மைக்கு; நிலைக்கு அது ஏற்றதாக இல்லை. அதைப் பரீட்சித்துப் பார்க்கக்கூட மாசேதுங் விரும்பவில்லை. ஏனெனில் 70கோடி மக்களைக் கொண்ட அந்த நாட்டிலே விவசாயத்தில் ஒரு சிக்கல் ஏற்பட்டு உற்பத்தி பாதிக்கப்படுமாக இருந்தால் ஏற்படக்கூடிய உணவுப் பிரச்சினையை ஒரு பரீட்சை பண்ணிப்பார்க்கக்கூட விரும்பாமல் அதை அப்படியே வைத்துக்கொண்டு, கைத்தொழில் மயம் ஆக்குகின்ற அந்தத் துறையில் முற்று முழுதாக தேசியமயமாக்கி அரசுடமையாக அதை ஆக்கிக் கொண்டார்.

யூகோசிலாவியா, அதுவும் ஒரு சோஷலிச நாடுதான். அங்கே கைக்கொள்ளப்படுகின்ற சோஷலிச அமைப்பு சோவியத் யூனியனில் கைக்கொள்ளப்படுகின்றதிலும் பார்க்க சிறிது வித்தியாசமானது. இதே போல் ஒவ்வொரு நாட்டிலும் கைக்கொள்ளுகிறார்கள். எமது நாட்டின் அமைப்புக்கேற்ற வகையில், எமது மக்களின் தன்மைக்கு ஏற்ற வகையில், எமது பொருளாதார மூல வளங்களுக்கு ஏற்ற வகையிலே, எந்த எந்த வகையில் நாம் செல்ல வேண்டும் என்பதை நாம் சிந்தித்து, சோஷலிச அடிப்படையிலேயிருந்து வழுவாத வகையிலே திட்டமிட்ட பொருளாதார அமைப்பை நாம் மேற்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு இலங்கை அரசு கைக்கொள்ள முற்படுகின்ற பொருளாதாரம்—நான் பாராளுமன்றத்தில் சென்ற வரவு செலவுத் திட்டத்திலும், முதலாவது வரவு செலவுத் திட்டத்திலேயே கூறினேன்-திட்டமற்ற தன்மையை ஒரு இலட்சியமாகக் காட்டுகின்ற மிகவும் முட்டாள்தனமான வேலையை இந்த அரசாங்கம் செய்கின்றது எனக் கூறினேன். தங்களுக்கு ஒரு திட்டம் இல்லை என்பதையும், அதுதான் ஒரே வழி என்றும் கூறியிருக்கிறார்கள். இன்ன திட்டம், இதுதான் வழி என்று காட்டாமல் எங்களுக்கு ஒரு திட்டம் இல்லை. அதுதான் வழி. தெருவில் நினைத்தவன் நினைத்த மாதிரி போகலாம், அதுதான் பாதை என்று காட்டினார்கள்; ஆனல் ஒரு பாதையை வெட்டி அமைத்துச் சீர்திருத்தி இதுதான் பாதையென்று காட்டவில்லை என்பதை நான் அவர்களுக்குக் கூறினேன்;

முந்தியஅரசு என்ன தவறு இருந்தாலும் டாக்டர் என். எம். பெரேரா நிதி அமைச்சராக இருந்தபோது ஒரு திசையை நோக்கி அந்தப் பொருளாதாரத் திட்டம் சென்றதென்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனபடியால் எங்களைப் பொறுத்தவரையில் அரசியற் சுதந்திரத்தோடு எமது இனத்தினுடைய சமூக பொருளாதார சுதந்திரத்தைசமதர்ம அடிப்படையில்—உற்பத்திச் சாதனங்கள், அவற்றை விநியோகிக்கும் வழிவகைகள் மக்களுடமையாக ஆக்கப்படுவதன் அடிப்படையில்தான் நாம் வளர்க்கமுடியும். அப்படியில்லாவிட்டால் நாம் போதியளவு வேகமாக வளர்க்கமுடியாது. நாம் மிகவும் பின்தங்கிய ஒரு நிலைக்குத் தள்ளப்படுவோம்.

இதைச் சுருக்கமாகக் கூறுவதாக இருந்தால் எமது அரசியலமைப்பு எப்படிப் பல்வேறு பகுதியினருடைய அபிலாஷைகளும் மதிப்பும் அளிப்பதாக அமையுமென்பதை நான் ஆரம்பத்திலேயே கூறினேன். ஆனல் அதேஅரசியலமைப்பு எமது பொருளாதாரத் திட்டத்திற்கு ஏற்றதாகவும் அமைய வேண்டும். அதற்கான உருவத்தை நாம் இந்த அரசியலமைப்புக்குக் கொடுத்துத் திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்தியை நாம் மேற்கொள்ள வேண்டுமே தவிர, விரும்பியவர்கள் விரும்பிய துறையிலே பொருளாதார அபிவிருத்தி செய்யலாமென்றால்—அப்படியானல் கசிப்புக் காய்ச்சுவதுகூட ஒரு பொருளாதார அபிவிருத்தியாகி விடும். இப்படி விரும்பியவன் விரும்பிய துறையிலே பொருளாதாரத்தை மேற்கொள்ளலாமென்ற அந்த நிலையைவிட்டு, திட்டமிட்ட அடிப்படையிலே சமதர்ம சோஷலிச பொருளாதாரத் துறையின் அடிப்படையிலே சமுதாயத்தின் நலனை, சமுதாயத்தினுடைய தேவைகளை, சமுதாயத்தினுடைய வளர்ச்சியை, சமுதாயத்தினுடைய தன்மையை எல்லாவற்றையும் கருத்திற்கொண்டு திட்டமிட்ட சோஷலிச பொருளாதார அடிப்படையைக் கொண்டதாக தமிழீழ அரசு அமைய வேண்டும்,

எங்கள் சமூகத்திலே ......... மேலை நாடுகளில் இல்லாத ......... ஒரு பிரச்சினை உண்டு. இந் ......... தியாவுக்கும், இலங்கைக் .........—கும் ஒரு பொதுவான பிரச் ......... சினை இந்தச் சாதியமைப்பு. ......... சாதி ஒழிக்கப்படவேண்டும் ......... அந்தச் சூழ்நிலையிலேதான். ......... எமது சமுதாயம் ஒரு சம ......... தர்ம சமுதாயமாக அமைய ......... முடியும், சாதியை வைத் ......... துக்கொண்டு பொருளாதா ......... ரத்திலே மாத்திரம் நாங் ......... கள் சமதர்மத்தை ஏற் ......... படுத்தி விட்டோம் என்று ......... கூறுவதிலே அர்த்தமில்லை. .........

ஆனபடியால் சோசலிஷ நாடுகளிலே, மேற்கு நாடுகளிலே கைக்கொள்ளப்பட்ட பொருளாதாரப் புரட்சியோடு எங்களுக்கு ஒரு சமுதாயப் புரட்சியும் தேவை — இந்தச் சாதியை ஒழிக்கின்ற புரட்சிதேவை—அது சிந்தனையின் அடிப்படையிலே ஏற்படவேண்டிய ஒரு புரட்சியாக அமைந்து தீர வேண்டியிருக்கிறது.

அதிலேதான் தமிழ் நாட்டில் மார்க்சிய இயக்கங்கள் தவறின. அதிலே தான் தமிழ் நாட்டில் திராவிட இயக்கங்கள் வெற்றி கண்டன. தமிழ் நாட்டிலே இருந்த அடிப்படை வியாதி சாதியாக இருந்தது. மார்க்சிய இயக்கங்கள் ஐரோப்பாவிலேயிருந்து கொண்டுவரப்பட்ட சித்தாந்தங்களை அப்படியே தமிழ்நாட்டில் முன்வைக்கப்பார்த்தார்கள், ஆனல் பெரியார் சமதர்மக் கருத்தோடு சாதி ஒழிப்பு போன்றவற்றையும்சேர்த்து வளர்த்த காரணத்தினலே தான் திராவிட இயக்கம் தமிழ் நாட்டில் சமதர்ம இயக்கங்களை மேற்கொண்டு ஒரே இயக்கமாக அங்கு வளரும்நிலை ஏற்பட்டதென்பதை நாம் காணக்கூடியதாக இருக்கும்

ஆனபடியால் எமது சமுதாயம் வர்க்க ரீதியாக அவ்வளவு தூரம் பிளவுபட்ட சமுதாயமாக காணப்படவில்லை, எங்கள் சமூகத்திலே மேல் தளத்திலே எங்களுடைய மார்க்சியவாதிகள்—“பூஷ்வா” என்று வர்ணிக்கப்படுகின்ற விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரை நாம் எடுத்துக்கொள்ளலாமே தவிர, எங்கள் சமுதாயம் வர்க்க ரீதியாக அவ்வளவு பிளவுபடாவிட்டாலும், சாதியடிப்படையிலே பிளவுபட்ட சமுதாயமாக இருக்கிறது. ஆனபடியால் நாம் ஏற்படுத்த விரும்பும் சமுதாயப் புரட்சி சாதி ஒழிப்புத்துறையிலே எந்தத் தொழிலையும் யாரும்செய்யலாம் என்ற நோக்கத்தைக் கொண்டதாக, அந்தத் தன்மையைக் கொண்டதாக அமைய வேண்டும்.

உண்மையில் தமிழ் நாட்டில் கருணாநிதி அரசாங்கம் அந்தத் துறையிலே எடுத்துக் கொண்ட முயற்சியை உயர்நீதிமன்றம் தடுத்தது, ஆலயத்தில் அர்ச்சகராக இருக்கக்கூட யாருக்கும் உரிமையுண்டென்பதை அவர்கள் செயற்படுத்த முயற்சித்தார்கள்: எந்தத் தொழிலையும் எவரும் செய்யலாம் என்றால், உயர் தொழிலாகக் கருதப்படும் தொழில் என்றால் என்ன? மிகத்தாழ்ந்த தொழில் என்று கூறப்படுகின்ற தோட்டியினுடைய தொழிலென்றால் என்ன? அதை எவரும் செய்கின்ற ஒரு நிலை ஏற்படவேண்டும். பிறப்பினால் ஒரு சிலர்தான் சில தொழிலைச்செய்யலாம், ஒரு சிலர் தாழ்ந்த தொழிலைச் செய்ய வேண்டுமென்ற கட்டுப்பாடற்ற ஒரு நிலைமைக்கு நாம் எங்கள் சமுதாயத்தை எடுத்துச்செல்ல வேண்டும்;

ஆனபடியால் நாங்கள் ரஷ்யாவிலே செய்ததை, சீனாவிலே செய்ததை அப்படியே இங்கே நாங்கள் கொப்பிபண்ணி, பிரதிபண்ணி நடத்த முடியாது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்; மார்க்சிய சமதர்மப் புரட்சியை சமுதாயப் புரட்சி உருவத்திலே கொண்டுவரும்போது சாதியை ஒழிப்பது அத்தியாவசியமான ஒரு அங்கமாக அமைகின்றது அதைத்தான் நாங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினுடைய நோக்கத்தில் ஒன்றாக முன்வைத்தோம். அதை நோக்கி விசேடமாக இளம் சந்ததிதான் உழைக்க வேண்டும்-அதிலே ஊறிப்போன முதியவர்களை அதை உணரச்செய்வது மிகக் கஷ்டம். அவர்கள் ஒப்புக்காகஎங்களுடைய வற்புறுத்தலுக்காக சில சந்தர்ப்பத்திலே ஏற்றுக் கொண்டாலும், அவர்கள்—மனப்பூர்வமாக அவர்களுடைய இரத்தத்தில் ஊறிவிட்டகாரணத்தினல் இதை ஏற்கமாட்டார்கள், சில சமயத்திலே தங்களையறியாமலே அது வெளிவரப் பார்க்கிறது. ஆனல் இளம் சந்ததி இந்தப் புரட்சியை முற்று முழுதாக நடத்த வேண்டும். முற்றுமுழுதாக நடத்துவதற்குநாங்கள் பின்நிற்கக்கூடாது,

—வளரும்

## மனித உரிமை மீறலுக்கு எதிராக திருச்சபைகளும் பிரச்சாரம் செய்யும்!

### சர்வதேச திருச்சபை கவுன்சில் முடிவு!

திருச்சபைகளும்கிறிஸ்தவர்களும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் அவற்றைக் கைதூக்கிவிடுவதிலும், அவற்றுக்காக வாதாடுவதிலும், மிகவும் நெருக்கமாகத் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும்! என்ற முடிவு டென்மார்க் கொப்பன்ஹேகனில் செப்டம்பரில் நடைபெற்ற திருச்சபைகளின் உலக கவுன்சிலில் ஏற்றுக் கொள்ளப்பட்டது;

பிராந்திய திருச்சபைகளின் சார்பில் 30 அறிஞர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

உலக விவகாரங்களில் மனித உரிமைகள் குறித்து ஆலோசனை வழங்குவதற்காக உருவான சர்வதேச திருச்சபைகளின் ஆணைக்குழுவின் முதலாவது கூட்டம் இதுவாகும்;

மனித உரிமைகளைப் புறக்கணிக்கும் அரசுகளுக்கு எதிராக பிரசாரம் செய்வதே இக்குழுவின் பிரதானஇலட்சியமாகும், மனித உரிமைகள் பற்றிய கல்வியை ஊட்டுவதும் இந்தக் குழுவின் மற்றோர் இலட்சியமாகும்,

புதியவகையான சித்திரவதைகள் தனித்துவமான மக்கள் கூட்டத்தின் உரிமைகள் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்தும் இக்குழு அக்கறை செலுத்தவிருக்கிறது.

—(நன்றி; மோர்ணிங் ஸ்டார்)

# "ஜனதிபதிஜே. ஆருக்கும் பாராளுமன்றத்துக்கும் இராணுவத்துக்கும் தெரியாமல் வடமாராட்சியில் அதிகாரபூர்வமற்ற ஊரடங்கு உத்தரவா?

## பொலீஸ் மாஅதிபருக்கு சட்டத்தரணி கடிதம்!

சட்டத்தரணி திரு. சி. வி, விவேகானந்தன் பொலிஸ்மாஅதிபர்திரு. அன செனிவிரத்தினவுக்கு பின்வரும்முறைப்பாட்டை தமதுவழக்காளியானதுன்னலை தெற்கைச்சேர்ந்தவடமாராட்சி கலாசார, பிரயாணிகள். சங்கத் தலைவர் திரு. கந்தையா விக்னேஸ்வரராஜாவின் சாபில் கொடுத்துள்ளார்.

வடமாராட்சியிலுள்ள தனியார் கல்வி நிலையங்களின் இயச்குநர்களிடம் அவர்களது கல்வி நிலையங்களில் 18.11-79முதல் பிற்பகல் 6மணிக்கு மேல் வகுப்புக்களை நடத்தக்கூடாது என்று பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், காங்கேசன்துறை ஏ. எஸ். பியும் கட்டளையிட்டுள்ளனர் 19-11.79 இல்லிருந்து வீதிகளில்மாணவர்கள் எவரும் இரவு 7.15க்கு மேல் நடமாடக் கூடாதென்று எச்சரிக்கப்பட்டுள்ளனர். இதற்கு எந்தக் காரணமும் கூறப்படவில்லை.

எனது வழக்காளியின் பிள்ளைகள் இருவர் நெல்லியடியிலும் துன்னலையிலுமுள்ள தனியார் கல்வி நிலையங்களில் கல்வி கற்கின்றனர். அவர்களில் ஒருவர்; ஜீ, சி.ஈ. சாதாரண தரச்சோதனைக்கு டிசெம்பரில் தோற்றவிருக்கிருர்.

வடமாராட்சியில் ஏறத்தாழ46தனியார்கல்வி நிலையங்கள் மாலை நேரவகுப்புக்களைஇரவு8மணிவரைநடத்திவருகின்றன. இவற்றில் எல்லாமாக 5000 மாணவர்கள் படிக்கின்றனர். இதில்3000 பிள்ளைகள் ஜீ,சி. ஈ, பரீட்சைக்குத் தயார் செய்கின்றனர்.

காங்கேசன்துறை ஏ.எஸ், பியும், பருத்தித்துறை பொறுப்பதிகாரியும் விதித்துள்ள கட்டளைசட்ட விரோதமானது, ஜனநாயக விரோதமானது, சட்டவிளக்கத்துக்கு எட்டாதது என்பதை நீங்கள் (ஐ.ஜி, பி) ஏற்றுக்கொள்வீர்கள் என்று எனது வழக்காளி நம்புகிருர்.

இந்தச் சட்டவிரோதஉத்தரவினல் பாதிக்கப்பட்டிருக்கும் பல ஆயிரக்கணக்கான பெற்ரேரில் எனது வழக்காளியும் ஒருவர்அவர் தெருக்களில் உலாவும் தமது பிள்ளைகளினதும், ஏனைய பிள்ளைகளினதும் பாதுகாப்புக்குறித்து அச்சமும் மனவேதனையும் அடைகிறர்; தமது கல்வி நிலையங்களில் கூடிக் கல்விகற்கும் சுதந்திரம் இந்த மாணவர்களுக்கு குறித்த சட்டவிரோதக் கட்டளையால் மறுக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்டசட்டவிரோத உத்தரவுக்கு அமைந்துநடக்காவிடின், அவசரகாலச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுதுன்புறுத்தப்படுவர் என்று கல்விநிலையங்களின் இயக்குநர்கள் பயமுறுத்தப் பட்டுள்ளதாக எனது வழக்காளிகூறுகிருர்.

இந்தச் சட்டவிரோத உத்தரவும் பயமுறுத்தலும்குறித்து நீங்களோ (ஐ.ஜி:பி)அல்லது யாழ்ப்பாண இணைப்பதிகாரி பிரிகேடியர் வீரதுங்காவோஅறிந்துகொள்ளவில்லை யென்றே எனது வழக்காளி கருதுகிருர்.

எனது வழக்காளி, ஜனதிபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும், திருமதி சிறிமா பண்டாரநாயகாவுக்கும் பின்வரும் தந்தியை அனுப்பியுள்ளார்.

"பொலீசார் தனியார் கல்வி நிலையங்களை நாளையிலிருந்து இரவு எட்டு மணிக்குப்பதிலாக மாலை ஆறு மணிக்கே மூடும்படிஎச்சரித்துள்ளனர். கல்வி நிலையங்கள் மாலை 6.30க்கு மேல் திறந்திருந்தால், அவற்றின் இயக்குநர்களைக் கைதுசெய்யப்போவதாகவும், மாணவர் இரவு 7.30 மணிக்கு மேல் வீதியில் காணப்பட்டால் அவர்களைக்கைதுசெய்யப் போவதாகவும் பயமுறுத்தியுள்ளனர். பாராளுமன்றத்துக்கும் ஜனதிபதிக்கும் யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவத்துக்கும் தெரியாமல் அதிகார பூர்வமற்ற ஊரடங்கு திணிக்கப்படுகிறது. புலிகள் என்று கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு விடுவோம் என்ற அச்சம் காரணமாக பெற்ருர்கள் இச்சட்ட விரோத உத்தரவை ஆட்சேபிக்கத் தயங்குகிருர்கள்; இச்சட்ட விரோத உத்தரவினல், மாணவர்கள் மத்தியிலே தேவையற்ற கொந்தளிப்பு ஏற்பட இடமுண்டு. இதிலே உடனடியாகத் தலையிடவும் இச்சட்டவிரோத நடவடிக்கையை தடுத்து நிறுத்தவும்"

அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள அடிப்படை உரிமைகளுக்கு உலை வைக்கும் இச்சட்ட விரோத உத்தரவை வாபஸ் பெறுவதற்கு நீங்கள் உடனடியாக உத்தரவிடாத பட்சத்தில் எனது வழக்காளி சட்டத்தின் துணையை நாடி நீதிமன்றத்தில் "றிட்" மனுதாக்கல் செய்ய உத்தேசித்துள்ளார்.

இவ்வாறு சட்டரீதியாகத் தாம் நடத்தும் போராட்டத்தின் விளைவாக பொலிசார் தம்மீது அடக்கு முறையை ஏவிவிடக்கூடும் என்று அஞ்சும் எனது வழக்காளி. பொலீஸ் மா அதிபர் என்ற முறையில் மனித உரிமையின் பெயரால் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று பொலிசாரை எச்சரிப்பீர்கள் என்றுஎதிர்பார்க்கிருர்.

இது சம்பந்தமாக தங்களிடமிருந்து திட்டவட்டமான பதிலை எனது வழக்காளி எதிர்பார்க்கிருர்.

—இவ்வாறு சட்டத்தரணி திரு. விவேகானந்தன் எழுதியுள்ளார்.

## கிழக்கில் அமிர்தலிங்கம் சுற்றுப்பயணம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அமிர்தலிங்கம், கூட்டணித் தலைவர் திரு.மு. சிவசிதம்பரம். க. துரைரத்தினம் பா,உ ஆகியோர், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்டூர்சந்திவெளி. கிரான், சித்தாண்டிபோன்ற பல பகுதிகளுக்கும் சென்று பொலிசாராலும் இராணுவத்தினராலும் துன்புறுத்தப்பட்ட மக்களைச்சந்தித்து ஆறுதல் கூறியதுடன் விபரங்களும் சேகரித்தனர். இவர்களுடன் பட்டிருப்பு பா.உ. கணேசலிங்கமும் சென்றிருந்தார்,

## பாரிஸ் பத்திரிகையாளர் மாநாட்டில் வைகுந்தவாசன்



இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் நிலை தென்னபிரிக்க கறுப்பர் இனமக்களின் நிலையைவிட மிகமோசமானதென்று லண்டனில் தலைமைச் செயலகத்தைக் கொண்டியங்கும் கடல் கடந்த தமிழர் இணைப்புக் குழுத் தலைவரும் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து லண்டனில் வழக்கறிஞராக இருப்பவருமான திரு. கிருஸ்ண வைகுந்தவாசன் இங்கு நடந்த ஒருபத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கத்திய நிருபர்களிடம் புகார் செய்தார்,

இலங்கைவாழ் இந்தியவம்சாவளித் தமிழ் மக்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டிருப்பதால் அவர்கள் அந்நாட்டின் தேசிய வாழ்வில் எவ்வித உரிமையும் இல்லாதவர்களாக தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிருர்கள் அவர்களுக்கு குடியுரிமையில்லை, ஓட்டுரிமையில்லை வீடுவாசல் காணி, பூமிவாங்கும் உரிமையில்லை. உயர் கல்வி உரிமை இல்லை. ஆபிரிக்க கறுப்பர்கள்கூட எத்தனை மோசமாக நடத்தப்படுவது இல்லையென்றும் அவர் விளக்கமளித்தார்,

பெரும் பெருந்தோட்டங்களில் உழைத்துப் பிழைக்கும் அவர்களது நிலை கவலையளிக்கக்கூடியது; அவர்களுக்கு அற்ப கூலியே தரப்படுகிறது. குடியிருப்புகளும் மோசமானவைகளே என்ருர்.

இலங்கைத்தமிழர்களுக்கு சுதந்திரம் கோரி பிரசாரம் செய்துவரும் ஒரு குழுவின் தலைவரான இவர் பாரிஸில் வாழும் ஆயிரத்துக்கும்மேற்பட்ட தமிழ் மக்களின் முக்கிய பிரமுகர்களை சந்திப்பதற்காக இங்கு வந்திருக்கிருர்.

இவர் ஒரு முறை பலத்த பந்தோபஸ்தையும் மீறி ஐ. நா, பொதுச்சபையில் பிரவேசித்து அங்கு மேடைக்கும் சென்று தமிழர் சார்பில் அவர்களது குறைகளை அறிக்கையாக வாசித்து பெரும்பரபரப்பைஏற்படுத்தியவர் என்பது நினைவிருக்கலாம்.

## அரபுநாடுகள் மீது பழிபோடுவதா?

"யூ. என். பி. அரசாங்கத்தின் பிழையான பொருளாதாரக் கொள்கையினல் ஏற்பட்டுள்ளநேர்விளைவுகளுக்கு அரபுநாடுகள் தங்கள் எண்ணெய் விலையை உயர்த்தியதே காரணம் என்று கூறி அரபுநாடுகள் மீது பழிபோடுவதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். மேற்கு நாடுகள் பன்னெடுங்காலமாக அரபுநாடுகளின் எண்ணெய் வளத்தைச் சூறையாடி வந்துள்ளன. அவற்றுக்கு நியாயமான விலையைக் கொடுக்கவில்லை. அதன் காரணமாக தங்களின் எண்ணெய் வளத்தை விலையைக் கூட்டும் உரிமை நிலைநாட்டுவதில் அரபுநாடுகள் முயலுவதில் தவறு இல்லை. அப்படிச் செய்ய அந்த நாடுகளுக்கு உரிமையுண்டு"

—மு. சிவசிதம்பரம் பா. உ. (பாராளுமன்றத்தில் 19.11-79)

## எம்மை அடக்கியாள நினைத்தால் அழிந்து போவீர்கள்!

வரவு செலவுத்திட்டத்தின்கீழ் தமிழ் பகுதிகளில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் படைகளுக்குப் பெருமளவு செலவு செய்யப்படுகிறது: இராணுவத்தைக் குவித்துஎம்மை அடக்கி ஆளலாம் என்று நினைக்கிருர்கள். இராணுவ ஆட்சி நடக்கிறது.

1979ம் ஆண்டில் 73 கோடி 27 இலட்சம் ரூபா இராணுவத்துக்கு ஒதுக்கப்பட்டது: 1980ல் இத்தொகை 100 கோடி 53 இலட்சமாக அதிகரித்து விட்டது. இது முந்திய ஆண்டைவிட 27 கோடி அதிகமாகும், வடக்கிலும், கிழக்கிலும் உள்ள மக்களை அடக்குவதற்கே இந்தத்தொகை. பருத்தித்துறையில் நேற்றும் பொலிசார் பொதுமக்களைத் தாக்கியுள்ளனர், இந்த நிலையில்தான் ஒத்துழைப்புப் பல்லவிபாடுகிறீர்கள், பயங்கரவாதத்தைப் பயங்கரவாதத்தால் அடக்கமுடியாது என்பது புத்தபெருமானின் கொள்கையாகும்.

இந்நாட்டுத் தமிழ் மக்கள் வாழும் வரை தமிழர் விடுதலைக் கூட்டணியை அழிக்க முடியாது. இழந்த உரிமையை நாம் கேட்கிறேமே தவிர— சிங்கள மக்களை அடக்கியாள வேண்டும் என்று நாம் கேட்கவில்லை. மறுக்கப்பட்ட எமது மனித உரிமைகளையே கோருகிறேம்.

எங்களை அழிக்கமுற்பட்ட அத்தனை அரசுகளும் அழிந்து விட்டன. அதே போன்று உங்கள் அரசும் எம்மை அழிக்க முற்பட்டால். அழிந்து போய்விடும்.

—வரவு செலவுத் திட்டவிவாதத்தில் காவலூர் பா.உ. பண்டிதர் இரத்தினம்,

# சபையில் எதிரொலித்த தமிழ் ஈழம்

வட்டுக்கோட்டைப் பா.உ, திரு, திருநாவுக்கரசு:— ''தமிழ் மக்களுக்குப் பல துறைகளிலும் பாரபட்சங்களைக் காட்டிக் கொண்டு, எந்தப்பாகுபாடும் காட்டவில்லை: தமிழ் மக்கள் அரசுடன் ஒத்துழைக்கிறார்கள் என்று வெளி உலகுக்குக் காட்ட முயல்கிறீர்கள். ஒரு சிலரை நீங்கள் விலை கொடுத்து வாங்கலாம். ஆனால் ஒரு இனத்தையே விலை கொடுத்து வாங்கிவிட முடியாது''

★ ★ ★

எக்ஸ். எம். செல்லத்தம்பு;— ஒரே வீட்டுக்குள் இரண்டு சகோதரர்கள் இருந்து சண்டை போடுவதைவிட, இருவரும் தனித்தனியே பிரிந்து ஒற்றுமையாக வாழ்வதுமேல். அதே போல எமது பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு தமிழ் ஈழம்தான். அதனைப் பெறுவதற்கு நாம் யுத்தம் செய்யாமல் தமிழர்களும், சிங்களவர்களும் இணக்கமாகவே பிரிந்து கொள்ளலாம். பிரிந்திருந்து ஒருவருக்கொருவர் உதவியும் செய்யலாம் ஒரே வளவுக்குள் சொரியலாக வாழாமல் தனித்தனியான குடிசைகளை அமைத்துக் கொண்டு வாழவே விரும்புகிறோம், அதற்கு சமாதானமாக வழிவிடுங்கள் என்றே கேட்கிறோம்.?

★ ★ ★

சுனில் ரஞ்சன் ஜெயக்கொடி!— ''கூட்டணியினர் புலி விளையாட்டு விளையாடினாலும் தமிழ் ஈழம் கிடைக்கவே கிடைக்காது: எதிர்காலத்தில் எந்த ஒரு தமிழனும் இந்நாட்டை அடிமைப்படுத்த இடமளிக்கமாட்டோம்''

★ ★ ★

திவுலப்பிட்டி பா.உ. ஆரியரத்தின:— எதிர்க்கட்சியினர் தமது பணியை கடமையை சரிவரச் செய்கிறார்களா? அவர்களுக்கு எந்த நேரத்திலும் ஈழம், ஈழம் என்ற கதைதான்,

★ ★ ★

பிரதியமைச்சர் எட்வின் திலகரத்தின:— ''இலங்கை முன்னர் இருநாடுகளாக இருந்ததென்று கூறிகோப்பாய் எம்,பி. சரித்திரத்தைத்திரித்தார். இலங்கை இந்துசமுத்திரத்தின் முத்து என்று கூறப்பட்டதேதவிர, ''முத்துக்கள்'' என்று எங்கும் கூறப்படவில்லை. சிங்களமக்களுக்கு இதுதான் ஒரேநாடு-தமிழர்களில் சிலருக்கு வேறுநாடிருக்கிறது, அதனால் இனியும் ஈழக்கோரிக்கையை எழுப்ப வேண்டாம். தமிழர் கூட்டணி உட்பட மற்ற எதிர்க்கட்சிகள் அபிவிருத்திக்கு நாசம் செய்கின்றன:'

★ ★ ★

இரா: சம்பந்தன்: அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவை குறைக்க நிதியமைச்சர் தவறிவிட்டார்.

றெனி டீ மெல்: நான் தவறிவிட்டேன் என்று கூறும் உறுப்பினரிடம் அவர்கள் கேட்டும் தமிழ்ஈழத்தில் வாழ்க்கைச் செலவைக் குறைக்க என்ன நடவடிக்கை எடுப்பார் என்பதைக் கூறுவாரா?

இரா. சம்பந்தன் எங்களது தமிழ்ஈழ அரசில் மன்னர் எம். பி. சூசைதாசன் நிதியமைச்சர்.

றெனி: அப்படியா? அவர் எனது அமைச்சின் ஆலோசனைக் குழுவில் இருக்கிறார். நான் அவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுகிறேன்.

இரா. சம்பந்தன்: முடியாது அது பெரிய இரகசியம். தமிழ் ஈழ அரசு கிடைக்கும்வரை அவர் அதனை வெளியிடமாட்டார். அவர் அப்போது தமிழ் ஈழ மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு மாத்திரமன்றி உங்கள் நாட்டுவாழ்க்கைச் செலவைக்குறைக்கவும் ஆலோசனை வழங்குவார்,

★ ★ ★

ஜினதாச வீரசிங்க: (யூ. என். பி.) ''யாழ் அங்கத்தவர் பட்ஜட் பற்றிப் பேசவில்லை. இனபேதம் பற்றித்தான் பேசினார். அவரது உள்ளத்தில் இதைத்தவிரவேறு எதுவும் இல்லை. அவருக்குத் தனிநாடுதான் வேண்டியிருக்கிறது. அவரின் கோரிக்கை 100 வருடம் சென்றாலும் நிறைவேறப் போவதில்லை''

★ ★ ★

யாழ் மாவட்ட அமைச்சர் யூ, பி. விஜயகோன்: ''தமிழர் விடுதலைக் கூட்டணியினர் எவ்வளவுதான் பேசினாலும், தமிழ் ஈழம் ஒருபோதும் உருவாக மாட்டாது; தமிழர் விடுதலைக் கூட்டணியின் கனவு ஒரு போதும் பலிக்காது; இன்றைய ஆட்சிக்காலத்தில் மட்டுமல்ல — சூரியனும் சந்திரனும் பூமியில் உதிக்கும் வரை இலங்கை இரண்டாகப் பிரிக்கப்படமாட்டாது.''

★ ★ ★

உடுதும்பர எம். பி- ரம்பண்டா. ''பனை ஓலையையும் தென்னை ஓலையையும் வைத்துக்கொண்டா கூட்டணியினர் தமிழ் ஈழத்தை அபிவிருத்தி செய்யப்போகிறார்கள்? குழந்தைகள் சந்திரனை பிடித்துத்தருமாறு பெற்றோரைக் கேட்பது போன்றதே தமிழ் ஈழக் கோரிக்கையும்.''

★ ★ ★

எட்வின் திலகரத்தின (பிரதியமைச்சர்): ''இலங்கை இரண்டு நாடுகள் என்பதுபோல காட்டுவதற்கு கோப்பாய்ப் பிரதிநிதி முயற்சிக்கிறார். அவருக்குச் சரித்திரம் தெரியாது போலும். கூட்டணியினர் தனிநாடு கோருவதை நிறுத்தவேண்டும். கோப்பாய் எம். பீயின் பேச்சுடன் ஒப்பிடும்போது, முல்லைத்தீவு எம். பியின் பேச்சு. நிதானத்துடனும் தெளிவுடனும் நயத்துடனும் இருக்கக் காணப்பட்டது.''

## பாராளுமன்ற--

—1-ம் பக்கத் தொடர்

யாக எழுப்பிப் பேசியதாவது:

இப்பொழுதுஅவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கும் யாழ் மாவட்டத்திலிருந்து வெளியிடப்படும் பத்திரிகைகளில் பாராளுமன்றக் கூட்டச் செய்திகளும் தணிக்கை செய்யப்படுகின்றன.

பாராளுமன்றக் கூட்டச் செய்திகள் கொழும்புப் பத்திரிகைகளில் அப்படியே வெளியாகின்றன; யாழ். தகுதிவாய்ந்த அதிகாரி அதே செய்திகளை யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படும் பத்திரிகைகளில் தணிக்கை செய்துவிடுகிறார்; அவருடையசெயல் பாராளுமன்ற சிறப்புரிமை மீறுவதாக இருக்கிறது.

பாராளுமன்றத்தில் நடைபெறும் விஷயங்களுக்கெல்லாம் பாராளுமன்றம்தான் பொறுப்பு. இங்கு மாத்திரமல்ல, வெளிநாடுகளிலுள்ள பாராளுமன்றங்களிலும் இதே நிலைதான்: எதையும் தணிக்கை செய்வதானால் அதைச்செய்யும் உரிமை இச்சபையினால் நியமிக்கப்படும் குழு ஒன்றுக்கு மட்டுமேயுண்டு,

1956, 58, 61, 71ல் எல்லாம் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டன. அந்த நேரங்களில் எல்லாம் இச்சபையின் குழுதான் சபை நிகழ்ச்சிகளின் தணிக்கைக்குப் பொறுப்பாகஇருந்தன. ஆனால் இந்த விதிமுறைகளை எல்லாம் மீறி யாழ்ப்பாணத்திலுள்ள தணிக்கை அதிகாரி இச்சபையில் நிகழ்த்தப்பட்ட பேச்சுக்களையும் தணிக்கை செய்துள்ளார், சமீபத்தில் சுதந்திரன் இதழில் இருந்து இப்படி நீக்கப்பட்டுள்ளது. அப்படிநீக்கப்பட்ட 'புறூப்' பிரதி என்னிடம் இருக்கிறது, அதில் அகற்றப்பட்ட பகுதியும்,அகற்றியவரின்கையொப்பமும் இருக்கிறது: அதை இங்கு சமர்ப்பிக்கிறேன்.

இது இச்சபையின் உரிமையை மீறும் செயலாகையால் யாழ் மாவட்டத்தகுதிவாய்ந்த அதிகாரி திரு: யோகேந்திரா துரைசுவாமியை இச்சபைக்கு வரவழைக்கவேண்டும். அவருக்கு எதிராக இச்சபையின் சிறப்புரிமைகள் குழு விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும்.''

இவ்வாறு திரு.அமிர்தலிங்கம் கூறியதையடுத்து, இவ்விஷயமாகத்தாம் விசாரணை நடத்துவதாக சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்கார் சபைக்கு உறுதியளித்தார்.

இந்நிகழ்ச்சி 23-11-79ல் பாராளுமன்றத்தில் இடம் பெற்றது.

## ''எமது சுதந்திர உணர்ச்சியை இராணுவத்தால் அடக்கி - - -

—1-ம் பக்கத் தொடர்

அமைதியாகவும் வாழவே விரும்புகிறோம்.

தமிழ் ஈழ நாட்டிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுங்கள் என்று உங்களிடம் கேட்கிறோம். நாம் இராணுவ ஆட்சியின் கீழ்இருக்க விரும்மாட்டோம். இராணுவத்தை அகற்றி எமது தேசத்தின் சிவில் நிர்வாகத்தை எம்மிடம் விட்டுவிடுங்கள். நாம் சுதந்திரமாக வாழ விரும்புகிறோம். இராணுவத்தினால் எமது சுதந்திரதாகத்தைஅடக்கி விட முடியாது.

நாம் வன்செயலை விரும்பவில்லை; உங்களுடன் மோதலுக்கும் தயாராக இல்லை; இந்நிலையில் உங்கள்இராணுவத்துக்கு அங்குஎன்னவேலை இராணுவத்துக்காககரியாக்கும் பலகோடி ரூபாக்களை உங்கள் நாட்டின் அபிவிதித்திக்குச் செலவிடுங்கள்.

இந்து சமுத்திரப் பிரதேசம் சமாதானப் பிரதேசமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். எமது இரு நாடுகளுக்குமிடையே பிரச்சினை இருக்கும்வரை சமாதானம் நிலவாது. எமது சுதந்திரத்தை சமாதானமாகப் பெற முடியாது. நாம் சண்டையிட்டு மோதிக் கொண்டால். மூன்றாமவர்—அந்நியர்— இதிலே தலையிட நேரும், எமதுவிவகாரங்களில் அந்நியர் தலையீட்டுக்குநாம்இடம்கொடுக்கக்கூடாது;

அந்நியர் எம்மிடையே நுழைந்தால் எங்கள் இரு நாடுகளும் பறிபோய் விடலாம்; ஸ்ரீலங்காவும் தமிழ் ஈழமும் மோதிக் கொண்டால் இருநாடுகளும் அந்நியர் வசமாகிவிடலாம். மூன்றாவது சக்திதான் எம்மை மீண்டும் ஆள நேரிடும். இந்த உண்மையை உங்கள் தலைவர்கள்மனதாரஉணர்ந்தாலும் வெளியே சொல்லத் தயங்குகிறார்கள்.

எம்மைப் பற்றிக் கவலை கொள்வதைத் தவிருங்கள். எமது நாட்டுக்காகவும் சேர்த்து நீங்கள் வரவு செலவுத் திட்டம் தயாரிக்க வேண்டாம்; எமக்காகநீங்கள்பணமும் ஒதுக்க வேண்டாம்.

ஒரு குரல்- எதற்காக பஸ்களைக் கேட்கிறீர்கள்?

கதிரவேற்பிள்ளை: நீங்கள் எங்களுக்குத் தேவையான பஸ்களை நாங்களே வாங்குவதற்கு அனுமதிப்பதில்லையே— எங்களுக்கு வேண்டியதை நாங்களே வாங்க எங்களைவிட்டு விடுங்கள் என்றுதான் கேட்கிறோம்.

உங்களை நீங்களே கவனித்துக்கொள்ளுங்கள், உங்களைப்பற்றி இனி நாங்கள் அக்கறைப்பட மாட்டோம், எங்களைத் தனியே பிரித்து விட்டு விடுங்கள்.

நாங்கள் உங்களுடன் எப்போதும் சமாதானமாக வாழவே விரும்புகிறோம். நாங்கள் உங்கள் எதிரிகள் அல்லர் உங்கள் நட்புறவு எங்களுக்கு வேண்டும். ஆனால் இணைந்து வாழ முடியாது, நாம் பிரிந்தே வாழ்வோம். இருநேசநாடுகளாக வாழ்வோம். இதிலே எல்லைப்பிரச்சினைகள் எதுவும் எழாமல் சமாதானமாகத் தீர்ப்போம்.

இராணுவத்திற்கு கோடிக்கணக்கானரூபாக்களை கொட்டுவதன் மூலம் இந்த ஆபத்தான பிரச்சினைகளைத் தீர்வு கண்டு விடமுடியாது.

நாம் தனியாகப் பிரிந்து சென்று சுதந்திரமாக வாழ்வதற்கு சமாதான முறையில் எல்லாமுயற்சிகளையும் நிச்சயம் செய்வோம்''

—இவ்வாறு பாராளுமன்றத்தில்வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்போது பேசிய கோப்பாய் பா.உ., சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை குறிப்பிட்டார்.

யாழ் மாவட்டத்தில்

செய்தித் தணிக்கை

அவசரகாலச்சட்டம்

**இன்றுடன்**

**135-வது நாள்**

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட்டாரால் யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1979ம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ம் திகதி புதன்கிழமைஅச்சிட்டு வெளியிடப்பட்டது,